www.tamilarangam.net


# செய்திக்கோவை

மலர் 14

ஐப்பசி 1985

"வேட்டுக்கள் தீர்வதனால் மட்டும் நாட்டிற்கு விடுதலை வந்துவிடாது"
அனைத்து மக்களின் ஒருங்கிணைந்த ஆதரவின் மூலம் தமிழீழ மக்களின் விடுதலையை வென்றெடுப்போம்

"அந்நிய நுகத்தடியில் அடிமைச் சுமையழுந்த, அடங்கி இனிக் கிடக்கும், காலம் ஒரு சில தான்"




## புரட்சி வெல்வோம்! உயர்ச்சி கொள்வோம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழச்

01.10.85

*மட்டக்களப்பில் இரு சப்இன்ஸ்பெக்டர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து 5 அப்பாவித்தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளது கல்லடிப்பகுதியில் உள்ள வீடுகளையும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தீக்கிரையாக்கியுள்ளனர்.

*ஒரு வாரத்தில் 4வது தாக்குதலாக பொத்துவில் பொலிஸ் நிலையத்தை தமிழ்ழப்போராளிகள் தாக்கியுள்ளதாகவும் இதன் போது ஒரு பொலிஸார் கொல்லப்பட்டும் இருவர் காயமடைந்துள்ளதாகவும் ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது.

*யாழ் கைதடியில் வைத்து ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் 80 வீதமான பொருட்களை இரு விடுதலை இயக்கங்கள் ஒன்று சேர்ந்து மீட்டெடுத்து சுல்தான் றாஸிக் போர்ட் உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளனர்.

*திருமலை மாவட்டத்தில் 5,000திற்கும் அதிகமான ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அப்பாவித்தமிழர்களை கைது செய்தபோது சாம்பல் தீவில் 6 தமிழர்களை சுட்டுக்கொன்றுள்ளதுடன் பல தமிழ்ப்பெண்களை பலாத்காரப்படுத்தியும் உள்ளனர்.

*யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் பாதயாத்திரை கொட்டும்மழையிலும் தொடர்ந்தும் நடைபெறுகின்றது.

.10.85

*தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, ஈழத்தேசிய விடுதலை முன்னணி ஆகியவற்றின் தலைவர்கள் இன்று காலை தமிழக முதல்வர் திரு எம் ஜி.இராமச்சந்திரனுடன் ஒன்றரை மணி நேரம் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்

*கடந்த நான்கு தினங்களில் வடக்குக்கிழக்குப்பகுதியில் 600றிக்கு மேற்பட்ட தமிழர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாக சன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த 1 ,9,85 அன்று முதூரில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் இராணுவ முகாமொன்று ஸ்ரீலங்கா இராணுவத்தால் கைப்பற்றப்பட்டதாக ஸ்ரீலங்கா அரசு கூறியுள்ளது, கழகத்தின் எந்த முகாமும் கைப்பற்றப்படவில்லை என்றும் காட்டுக்குள் ஒளிந்திருந்த அப்பாவி மக்கள் 12 பேரை சுட்டுக்கொன்று விட்டு பயங்கரவாதிகளை சுட்டுக்கொன்றுவிட்டேம் என ஸ்ரீலங்கா அரசு கூறியுள்ளது,

5,10,85

கிளிநொச்சி விசுவமடுப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவம் பெரிய அளவிலான தேடுதல் வேட்டை நடாத்திய போது 28 பயங்கர வாதிகளை சுட்டுக்கொன்றதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்தபோதிலும் சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் அப்பாவி விவசாயிகளே என உறுதிப்படுத்தப்பட்டுளது,

6,10,85

மட்டக்களப்பு இராணுவமுகாமில் இருந்து ஸ்ரீலங்கா பொலிஸ் கொமாண்டோக்களின் ஜீப்வண்டி ஒன்று மொறக்கொட்டாஞ்சேனையில் வைத்து தீவிவாத இளைஞர்களின் கண்ணி வெடிக்கிலக்காகி 1 கொமாண்டோ கொல்லப்பட்டுள்ளதுடன் 7 பேர் காயமடைந்துள்ளனர்,

புதுடெல்கியில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள அனைத்தியக்க பிரதிநிதிகளும் புதுடெல்கி சென்றுள்ளார்கள்,

# செய்திகள்



புதுடெல்கியில் திரு, ரொமேஷ் பண்டாரியுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் கருத்துத்தெரிவித்த கழக செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன், ஜே.ஆர் அரசு தொடர்ந்து பெருந்தொகையான யுத்த தளவாடங்களை ,கொள்வனவு செய்து கொண்டிருக்கையிலும், இராணுவத்தளங்களையும் இராணுவ எண்ணிக்கைகளையும் விஸ்தரித்துக்கொண்டிருக்கையிலும், யுத்த நிறுத்தம் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு என்பன வெறும் ஏமாற்று வித்தையே, ஜே,ஆர் அரசிற்கு அரசியல் ரீதியாக ஒரு சமாதானத் தீர்வு ஏற்படுத்தும் எண்ணம் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை, திம்புப்பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே ஜே,ஆர் அரசு யுத்த நிறுத்தத்தை மீறி அப்பட்டமாக செயற்பட்டது, குறிப்பாக யுத்த தளவாடத்தை இறக்குமதி செய்வதிலும் இராணுவவிஸ்தாப்பிலும் கண்ணும் கருத்துமாக இருந்தது, இந்நிலையில் கண்காணிப்புக்குழுவின் வேலையானது போராளிகள் தரப்பில் குற்றம் கண்டுபிடிக்கும் நடவடிக்கையாகவே இருக்கும், இதையே 1977ல் படுகொலைகளின் பின் அரசால் அமைக்கப்பட்ட சன்சோனிக் குழு எமக்குக் கற்றுத்தந்தது, யுத்ததளவாடங்களை இறக்குமதி செய்வது, இராணுவவிஸ்தாப்பு ஆகியவற்றை கட்டுப்படுத்தும் அதேவேளையில் ஆயுதசமநிலையை போராளிகள்ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் தான் உண்மையான ஒரு யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்த முடியும், எனவே உண்மையான சமாதானத்திற்காக போராடும் எமக்கு இந்திய அரசு முழுமையான ஆதரவைத்தரவேண்டும் எனவும், இந்திய அரசு கண்காணிப்புக்குழுவால் ஏதாவது செய்ய முடியுமென நம்பினால் அதற்கு எதிராக எதுவும் செய்ய மாட்டோம் என்றும் தெரிவிக்கப்பட்டது,

8,10,85

திருமலையில் வானெல பொலிஸ் நிலையம் தீவிரவாத குழு ஒன்றினால் தாக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா அரசு கூறியுள்ளது

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனையில் ஸ்ரீலங்கா பொலிஸ் அதிரடிப்படையினரின் பதில் தாக்குதலின்போது 13 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதுடன் பல வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன,

ஸ்ரீலங்கா இராணுவத்தின் அராஜகநடவடிக்கையின் போது முல்லைத்தீவில் 7 தமிழர்களும், மன்னாரில் இரு தமிழர்களும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்

புதுடெல்கியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் நிலைப்பாடு குறித்து விளக்கப்பட்போது, ஸ்ரீலங்கா அரசு குறிப்பிட்ட காலத்திற்கு யுத்தநிறுத்தத்தை நடைமுறைப்படுத்திக் காட்டினால் அன்றி, தொடர்ந்து பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது பயனற்றது, ஆகவே இவ்வாறு நடைமுறைப்படுத்திக் காட்டியதன் பின்பே கழகம் தனது கருத்தை வெளியிடும் எனவும் தெரிவிக்கப்பட்டது

கடந்த ஒரு மாதத்திற்கு முன் திருமலையில் வைத்து ஸ்ரீலங்கா பொலிஸ் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த த,ம வி, கழகத் தோழர்களான சசிதரனும் இன்னொருவரும் பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்,

10,10,85

மன்னார் தள்ளாடி வீதியில் ஸ்ரீலங்கா இராணுவ வண்டி ஒன்று நிலக்கண்ணி வெடிக்கிலக்காகியதைத் தொடர்ந்து 4 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்,

சிங்கள இராணுவத்தின் அட்டகாசத்தினால் வீடுகளை விட்டு வெளியேறிய மக்களின் 10 வீடுகள் ஸ்ரீலங்கா இராணுவத்தால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



14,10,85
முல்லைத்தீவு அலம்பரை வீதியில் ஸ்ரீலங்கா இராணுவவண்டி ஒன்று நிலக்கண்ணி வெடிக்கிலக்காகியதைத் தொடர்ந்து மூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர்

புத்தூரில் நான்கு சகோதரர்கள் தங்கியிருந்த வீடொன்றில் புகுந்த ஆயுதம் தாங்கிய குழு வொன்று ஒரு சகோதரனை அடித்துக்கொன்றதன் பின் அங்கிருந்த பணம் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்,

15,10,85
வெலிக்கடைச்சிறையில் தமிழ்க்கைதிகள் சிறையதிகாரிகளால் தாக்கப்பட்டு வருவதாகவும் இவர்களுக்கு சரியான முறையில் உணவு வழங்கப்படுவதில்லையென்றும், சிறைச் சாலைக்குச் சென்று பார்வையிட்ட கண்காணிப்புக்குழு உறுப்பினரான திரு, சிவத்தம்பி தெரிவித்துள்ளார்,

மல்லிகைத்தீவில் மூன்று முஸ்லிம்கள் தீவிரவாத இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா அரசு தெரிவித்துள்ளது ஆனால் தமிழர் முஸ்லிம்களுக்கிடையே மீண்டும் ஒரு கலவரத்தை உண்டு பண்ண ஸ்ரீலங்க அரசினால் ஏற்படுத்தப்பட்ட சம்பவம் இது என தெரியவந்துள்ளது,

17,10,85
மூதூர் 64ம் வட்டாரம் காலையோட்டுப்பகுதியைச் சேர்ந்த 7 முஸ்லிம்கள் கங்குவேலி தமிழ்க்கிராமத்திற்கு பொருட்கள் வாங்குவதற்கு மாட்டு வண்டியில் சென்ற போது அங்கு மறைந்திருந்த சிங்கள ஊர்காவற்படையினரும், இராணுவத்தினரும் அவர்களை சுட்டுக்கொன்றுள்ளதுடன், அவர்களது சடலங்களையும் தீமூட்டிக் கொளுத்தியுமுள்ளனர்,

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவரும் மாந்தையில் மூவரும் ஸ்ரீலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள்,

19,10,85
மட்டக்களப்புப் பகுதியில் ஆலங்குளம் கயான்கேணி, மண்டூர், ஆரையம்பதி, மாங்கேணி, வடமுனை போன்ற கிராமங்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தின் பலத்த சோதனைக்குள்ளாகியுள்ளதுடன், பலர் கைதுசெய்யப்பட்டுமுள்ளார்கள்,

பூசா இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த மட்டக்களப்புப்பகுதியைச் சேர்ந்த 11 தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்,

வண்ணார்பண்ணை பெருமாள் கோவிலில் இருந்த 6 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இளைஞர் கோஷ்டி ஒன்றினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது,

ஸ்ரீலங்கா அரசு காடுகள் உள்ள பிரதேசங்களை தடைசெய்யப்பபட்டட பிரதேசமாக அறிவித்துள்ளது,

20,10,85
மன்னார் சிலாபத்துறை பாலத்தில் வைக்கப்பட்நிலக்கண்ணி வெடிக்கிலக்காகி 5 ஸ்ரீலங்கா இராணுவத்தினர்கள் படுகாயமடைந்துள்ளனர்,

பருத்தித்துறைப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் மூன்று பள்ளிச் சிறுவர்களும், மீன்வியாபாரி ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்,



மட்டக்களப்பு சாந்தமலைப்பகுதில் மாட்டுவண்டியில் சென்று கொண்டிருந்த இரு தமிழர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள், மேலும் அம்பாறையில் 11 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதுடன் 2 பேர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்,

மன்னார் செட்டிக்குளம் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவ வண்டியொன்று நிலக்கண்ணி வெடிக்கிலக்காகி மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டும் மூவர் படுகாயமடைந்துள்ளதாகவும் ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது,

முல்லைத்தீவில் இடம்பெற்ற நிலக்கண்ணி வெடியொன்றில் 1 ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரி உட்பட இருவர் கொல்லப்பட்டுள்ளனர்,

இலங்கைத்தமிழர் பிரச்சினை சிக்கலானது என்றும் தீர்வு ஒன்று காண சிறிது காலம் எடுக்கும் எனவும், இருந்த போதிலும் எடுக்கப்படும், தீர்வு நல்ல முடிவாக இருக்கவேண்டும் எனவும் பிரதமர் ரஜீவ் காந்தி கூறியுள்ளார்

25,10,85
மன்னார் செட்டிக்குளம் பகுதியில் இடம் பெற்ற கண்ணி வெடித்தாக்குதலின் பின் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தின் போது 12 அப்பாவித்தமிழ் மக்கள் படுகாயமடைந்துள்ளனர்,

வாழைச்சேனையில் தமிழ்ச்சிறுவன் ஒருவன் ஸ்ரீலங்கா பொலிஸ் அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்,

26,10,85
மட்டக்களப்பு வீரமுனைப்பகுதியில் உள்ள கல்விநிலையம் ஒன்றின் மீது ஸ்ரீலங்கா அதிரடிப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் 7 மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்,

திருமலையில் தமிழ் பேசும் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றும், ஸ்ரீலங்கா ஊர்காவற்படையினர் தங்கள் இஷ்டப்படி தமிழ்மக்களை தாக்கி வருகின்றார்கள் என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினரான திரு, சிவபாலன் தெரிவித்துள்ளனர்

வவுனியா பூவலமடுவில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 5 தமிழர்களை சுட்டுகொன்றுள்ளனர்,

28,10,85
மட்டக்களப்புப் பகுதியில் வைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிக்கிலக்காகி வெல்லாவெளி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி உட்பட 6 ஸ்ரீலங்கா பொலிஸ் போலிஸ் கொமாண்டோக்கள் கொல்லப்பட்டுள்ளனர்,

30,10,85,
மட்டக்களப்பு சந்தி வெளியில் ஸ்ரீலங்கா பொலிஸ் அதிரடிப்படையினரின் வாகனம் ஒன்று நிலக்கண்ணி கண்ணி வெடிக்கிலக்காகி இரு பொலிசாரும் , இதனைத்தொடர்ந்து நடைபெற்ற துப்பாக்கிச் சமரில் 3 அதிரடிப்படையினரும் கொல்லப்பட்டுள்ளன

ஸ்ரீலங்கா பூசா இராணுவ முகாமில் 6 பெண்கள் உட்புட 617 பேர் தடுத்து வைக்கப்பட்டுளளதாக முகாமைப் பார்வையிட்ட போர்நிறுத்தக்கண்காணிப்புககுழு தெரிவித்துள்ளது,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கழகத்தின் செய்திப்பிரிவில் இருந்து......

தமிழ்மக்களே, ஆதரவாளர்களே, அன்பின் தோழர்களே,

இன்று தமிழீழத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அவலநிலைகள் குறித்து நீங்கள் கலக்கமும் குழப்பமும் கொண்டிருப்பதை நாங்கள் அறிவோம். அனைத்து இயக்கங்களும் போராட்டத்தை ஆரம்பித்துவிட்டார்கள், "தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்" மட்டும் ஏன் இன்னும் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை என்ற உங்கள் கேள்விகள் எங்கள் காதுகளை வந்தடைகின்றன. இது குறித்து தெளிவான விளக்கத்தை எம்மில் ஒருவரான உங்களுக்குத் தெரியப்படுத்துவதில் எமக்கு பெரும் கடமையுண்டு.

தமிழீழப்போராட்டம் முழுமையாக முன்னெடுத்துச் செல்லப்படாதிருந்த காலத்தில் 1981ம் ஆண்டு எங்கள் இயக்கம் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தைத் தாக்கி எமக்குத் தேவையான ஆயுதங்களை பெற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாமல் இதன் மூலம் ஆயுதப்போராட்டத்தின் அவசியத்தையும் அன்றே தமிழ்மக்கள் மத்தியில் தெளிவுறுத்தினோம்.

இன்று எம்மீது குற்றங்களைக் கூறிக்கொண்டு எம்மை ஆயுதப்போராட்டத்தைக் கைவிட்டவர்கள் என்றும் கையாலாகாதவர்கள் என்றும் விசமத்தனமாக பிரச்சாரம் செய்யும் சில இயக்கங்கள் சிறுசிறு தாக்குதல்களை மேற்கொண்டு விட்டு தமக்குத் தேவையான விளம்பரங்களையே தேடிக்கொண்டனர். அவர்கள் கூறுவது போல் நாம் ஆயுதப்போராட்டத்தில் நம்பிக்கை இழந்தவர்கள் அல்ல. இன்று நாம் மட்டுமே ஒரு பலமான இராணுவத்தைக்கட்டி தொடர்ந்து உழைப்பவர்களாவோம். ஆயுதப்போராட்டம் மட்டுமே விடுதலை உணர்வை கொண்டுவருவதில்லை. மக்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டு அவர்களின் ஆதரவை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் அமைப்புகளை உருவாக்கி நிர்வாகத்தை நடத்தும் வகையில் அதைபலம் கொள்ளச்செய்தல் விடுதலைப் போராட்டத்திற்கு அவசியமான விடயங்களாகும். ஆகையிலேயே நாம் மக்களை அணிதிரட்டுவதிலும், உணர்வு பூர்வமாக விழிப்படையச்செய்வதிலும் தொடர்ச்சியாக பல இன்னல்கள் மத்தியிலும் கடுமையாக உழைத்து பலம்மிக்கதொரு மக்கள் அமைப்பைக் கட்டிக்கொண்டிருக்கின்றோம். தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு ஆயுதப்போராட்டம் வகிக்கும் முக்கியத்திலும் பாரிய பங்களிப்பை மக்கள் சக்தியே வகிக்கப்போகின்றது என்பதே உண்மையாகும்.

தமிழீழத்திலே இன்று ஆயுதப்போராட்டம் நடத்திக்கொண்டிருக்கின்றோம் என கூப்பாடுபோடுகின்றவர்கள் மக்கள் சக்தியை அணிதிரட்டுவதில் முயற்சிகள் எதும் எடுக்கவில்லை. அதேவேளை மக்கள் சக்தியை தள்ளிவிட்டு அவர்களை ஆயுதம் காட்டி மிரட்டுதல் போன்ற செயல்களை புரிந்து வந்ததனால் இன்று தமிழீழத்தில் அவ்வமைப்புக்களோடு மக்கள் வெறுப்புணர்வு கொண்டிருக்கும் உண்மைநிலையை ஏற்றுக்கொள்வது அவர்களுக்கு கசப்பாகவே இருக்கும். இந்த வகையான நடவடிக்கைகள் இத்தாபனங்களின் தனிப்பட்ட பலவீனங்கள் என்று கூறிவிடமுடியாது. இவை தமிழீழப்போராட்டத்தை தேக்க நிலைக்கு கொண்டு வரும் நடவடிக்கைகளே. இவர்களது நடவடிக்கைகளால் தமிழ்மக்களே மேலும் மேலும் பாதிப்புக்குள்ளாகின்றார்கள். நாளாந்தம் அரச படைகளின் நடவடிக்கைகளால் அப்பாவித்தமிழ்மக்கள் கொல்லப்படுகின்றனர். அத்துடன் அரச படைகள் மேலும் தயார்படுத்தப்படுகின்றன. ஆனால் இத்தாக்குதலை நடத்தும் அமைப்புக்கள் தொடர்ச்சியான தாக்குதலுக்கான திட்டங்களையோ, ஆயுதங்களையோ வைத்திருக்கின்றார்கள் என்றால் அது தான் இல்லை. இவர்களது இத்தாக்குதல்கள் எல்லாம் அவர்களை ஒரு விடுதலை அமைப்பு என்ற அங்கீகாரத்தை



பெறவேண்டிய சுயநலமும் வெளிநாடுகளில் நிதிசேகரிப்பதற்கான பிரச்சாரமுமன்றி வேறொன்றும் இலை. இது காரணமாக தவறான செய்திகள் கூட வெளிக்கொணரப்பட்டு பெரிதாக்கப்படுவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது, எதிரி தமிழீழப் போராட்டத்தை நசுக்குவதற்கான நடவடிக்கைகளை வெகு மூர்க்கத்தனமாக எடுத்து வருகின்றான். கொக்கிளாய், நாயாறு போன்ற சிங்கள மக்கள் குடியிருந்த பகுதியில் நடைபெற்ற தாக்குதலைத் தொடர்ந்து உலகுதழுவிய முறையில் எமது விடுதலைப்போராட்டம் எதிர்ப்புக்குள்ளாகியதும், சிங்கள இராணுவம் தனது கோழைத்தனத்தை விடுத்து உணர்வூட்டப்பட்டு தேசபக்த சக்தியாக வீறுநடைகொண்டு வளர்வதும், தமிழீழ விடுதலைக்கு பாதகமான விடயங்கள் என்பதை கவனிக்கவேண்டும். மேலும் இத்தாக்குதல்களைத் தொடர்ந்து வெளிநாடுகளில் நிதி சேகரிப்பதும் வழமையாகிக்கொண்டிருக்கின்றது. இவ்வமைப்புகள் பற்றி மிக விழிப்பாக இருக்கவேண்டும். இவர்களுக்கு வழங்கப்படும் பணம் பொருள் உதவிகள் தமிழீழ விடுதலையை பின்னடைவு செய்யவே உதவுவதாக இருக்கும்.

போராட்டம் என்பது தந்திரோபாயமும், தொலைநோக்கும், வெற்றி நம்பிக்கையும் உடையதாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு நடவடிக்கையின் பின்பும் வரும் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு தொடர்ச்சியான திட்டம் தீட்டப்பட்டிருப்பது அப்போராட்டத்தின் வெற்றிக்கு அவசியமாகும். அத்துடன் எமது ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையும் காரணம் இருத்தல் வேண்டும். இது எதிரியை திசைதிருப்பச் செய்வதாகவும், கலக்கமடையச்செய்வதாகவும் இருத்தல் வேண்டும். இதுவே எதிரியை சோர்வுக்கும் தளர்ச்சிக்கும் உள்ளாக்கி போராட்ட உணர்வை மழுங்கடிக்கச் செய்யவேண்டும். எதிரி அலட்சியமாக இருக்கும் வேளைகளை சரியாகப்பயன்படுத்தி போராட்டம் ஆரம்பிக்கப்படுவது அவசியமாகும். இதன் மூலமே எமது விருப்பத்திற்கும் நிலைக்குமேற்ப போராட்டத்தை நாம் முன்னெடுக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால் எதிரி உசாராக இருக்கும் இவ்வேளையில் வலுச்சண்டைக்கு விடுக்கும் அறை கூவல்களை மதித்து யுத்தத்தை ஆரம்பிப்பதனால் எமக்கு பாரிய தோல்விகளே ஏற்படும். ஆகையால் தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் முக்கிய கட்டத்தில் இருக்கும் நாம் ஏன் யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை என்ற கேள்விக்கு அரசியல் ரீதியிலும், யுத்ததந்திரோபாய ரீதியிலும் ஆராயப்படவேண்டியது அவசியமாகும். ஆயினும் இன்று தமிழீழ மக்களுக்கு ஏற்பட்டுவரும் மோசமான போரிழப்புக்களுக்கும், பொறுப்புணர்ச்சியற்ற சில அமைப்புகளின் அசட்டையீனமான கேள்விகளுமே இதனைப் பெரிதுபடுத்துகின்றன. நிதானமாகவும் தொலைநோக்குடனும், எண்ணிப்பார்ப்பின் நாம் நிதானமாகவே முன்னேறுவது இன்றைய காலத்தேவையாக இருக்கிறது. அழிவுகளில் இருந்து விடுபட்டு வெற்றியை நோக்கி முன்னேறலாம். இதற்கு அனைவரினதும் இறுக்கமான ஒத்துழைப்பு மிகவும் தேவையாகியுள்ளது.

> ஏசட்டும், எதிர்க்கட்டும், பழிபேசட்டும், பகைகொட்டட்டும், ஆர்ப்பரிக்கட்டும் எதை வேண்டுமானாலும் அவர்கள் செய்யட்டும், பரவாயில்லை. அவைகளிலிருந்து தப்பிப்பிழைத்தால்தான் விடுதலை இயக்கம் என்பதற்கே மாண்பு ஏற்படும். ஏளனமும் எதிர்ப்பும் அழிந்துவிடுமாயின் உண்மையான விடுதலை உணர்வு உண்டாகவில்லை என்று பொருள். எனவே, நமது விடுதலை உணர்வுக்கு எத்துணை வலிவு இருக்கிறது என்பதே அதனிடம் காணப்படும் தாங்கிக் கொள்ளும் சக்தியின் தரத்தைப் பொறுத்திருக்கிறது.
>
> C.N. அண்ணாத்துரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'முதலாளித்துவ' நாடுகளிலிருந்து உதவியை பெறவே மார்க்சிய பிரசாரம்

## 'புளொட்' தலைவர் உமா சொல்கிறார்

சென்னை, அக். 26

முற்போக்கு சிங்கள நேச சக்திகளின் உதவியுடன் இலங்கை அரசாங்கத்தை பதவியிலிருந்து கவிழ்ப்பதற்கு தமது இயக்கத்துக்கு நீண்ட கால திட்டம் உண்டு என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் திரு. உமா மகேஸ்வரன் பி. ரி. ஐ. செய்தித்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ் தீவிரவாதிகள் தனது ஆட்சியைக் கவிழ்த்து மாக்ஸிச ஆட்சியை ஏற்படுத்த முயற்சிப்பதாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனா அண்மையில் தெரிவித்த குற்றச் சாட்டை திரு. உமாமகேஸ்வரன் ஏற்றுக் கொண்டார். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஜனாதிபதியின் குற்றச் சாட்டை ஆட்சேபிக்க மாட்டாது என்றும் திரு. உமா மகேஸ்வரன் பி. ரி. ஐ.யிடம் கூறியுள்ளார்.

பேட்டியில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

அரச பயங்கரவாதத்தை ஒழிக்க முயல்வது குற்றமாகாது. அது தமது கழகத்தின் உறுதியான கொள்கையாகும். எமது கழக அங்கத்தவர்களை ஜனாதிபதி மாக்ஸிஸ பயங்கரவாதிகள் என்று கூறியுள்ளார். ஆனால் அப்படியல்ல. எனினும் கழக அங்கத்தவர்கள் மார்க்ஸிஸ புரட்சியாளர்களாவர்.

மார்க்ஸிஸ பிரசாரத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் முதலாளித்துவ நாடுகளிடமிருந்து பணத்தையும், அந்நாடுகளிடமிருந்து ஆயுத உதவியையும் பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறது.

இலங்கையில் தமிழ் மக்களிடமிருந்து எதிர்நோக்கும் உண்மையான பிரச்சினையில் இருந்து கவனத்தைத் திசை திருப்ப அரசு எத்தனிக்கிறது.

இலங்கை அரசாங்கம் குருவித்திருக்கும் சக்திமிக்க ஆயுதங்களை விரைவில் விடுதலை இயக்கங்களிடம் ஒப்படைக்க வேண்டி ஏற்படும்.

தமிழீழ மக்கள் விடுதலை தாபனத்தில் அண்மைக் காலமாக அநேக இளைஞர்கள் ஆர்வமுடன் சேர்ந்து வருகிறார்கள். எமது அங்கத்துவம் அதிகரித்திருக்கிறது.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்ற கொள்கைக்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் சிங்கள மக்களைப் போன்று தமிழ் மக்களும் சம உரிமை பெற்று வாழ வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

---

## திருப்பூர் மாணவர் கருத்தரங்கில்... செயலதிபர்.

நாம் அவ்வப்போது நடாத்தும் கொரில்லாப் போராட்டமானது எமது மக்களிற்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் அமையலாமே தவிர எமது விடுதலையை தந்து விடாது.

எமது முற்று முழுதான விடுதலையைப் பெறுவதற்கு நாங்கள் ஒரு மாபெரும் மக்கள் யுத்தத்தை நடாத்தத் தீர்மானித்துள்ளோம். அதன் முதற்கட்டமாக நாம் எமது மக்களை அரசியல்மயப்படுத்தி வருகின்றோம். கிராமங்கள்தோறும் பல்வேறுபட்ட குழுக்களை அமைத்து வருகின்றோம். இதில் முக்கியமாக விவசாயிகள் பிரிவு, பெண்கள் பிரிவு உள்ளன. அரசியல் மயப்படுத்தப்பட்ட இக் குழுக்கள் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இந்த வகையில் அதிகாரம் மக்கள் மூலம் மக்களின் கைகளிலேயே வரும் வகையிலேயே நாம் எமது போர் முறைகளை வகுத்துள்ளோம்.

நாம் ஏந்தி இருக்கும் ஆயுதங்கள் தற்காப்புக்காகவே பயன்படுத்தப்படும்.

எமது மக்களைப் பாதுகாக்கவே எமது ஆயுதங்கள் பயன்படும். தனி நபர் கொலையிலோ, சிறு குழுத் தாக்குதல்களிலோ எமக்கு நம்பிக்கை கிடையாது. எந்த ஒரு அப்பாவிச் சிங்கள மக்களும் எமது எதிரிகளல்ல.

எமது படையானது இவர்களப் படையுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவான எண்ணிக்கையையே உடையது. மேலும் எம்மிடம் உள்ள ஆயுதங்களும் அவர்களுடன் ஒப்பிடும்போது வலிமை குன்றியதாகவே இருக்கின்றது. ஆனால் எமது வீரர்கள் எந்தச் சூழ்நிலையிலும் தம்மிடம் உள்ள ஆயுதங்களை தவறான நோக்கத்திற்கு தவறான வழியில் பயன்படுத்த மாட்டார்கள்.

அரசியல் தெளிவும், சிந்தனை ஆற்றலும், செயல் ஆற்றலும் ஒவ்வொருவருக்குப் பயிற்சியாக அளிக்கப்படுகின்றது. எங்கள் ஒவ்வொரு வீரனும் 'நான் எதற்காகப் போராடுகின்றேன்' என்பதைத் தெளிவாக உணர்ந்தவன்.

சுருங்கக் கூறின் அது கூலிப்படை; இது கொள்கைப் படை. இந்த வித்தியாசமே எமது வெற்றியை உறுதிப்படுத்தும்.

எமது இயக்கத்தைப் பொறுத்தமட்டில் தமிழீழ விடுதலைக்கு ஆதரவாக எந்த சக்தி உருவானாலும் அவற்றை நாம் பயன்படுத்திக் கொள்வோம். யாராயினும் எமது நோக்கத்தை ஏற்றுக் கொண்டால் அவர்களை நாம் ஏற்றுக் கொள்வோம். எமது யுத்தம் ஒரு குறுகிய பகுதிக்குள் இருக்கக் கூடாது. மாறாக அது பரந்து பட்டதாக இருக்க வேண்டும். எமது சிறிய வெற்றிக்காக பெரிய இழப்புக்களை ஏற்படுத்திக் கொள்வது சரியல்ல என்பதே எமது வாதமாகும். கொரில்லாப் போர் முறை எல்லா நாடுகளிலும் வெற்றி பெற்றுவிடாது. இலங்கையைப் பொறுத்தவரை இரண்டு தேசிய இனங்கள் உள்ளன. பூகோள அமைப்பு முறையை வைத்து கவனித்தால் இங்கு கொரில்லாப் போர் வெற்றி பெற வழியில்லை.

---

**அன்னை இந்திரா காந்தி அவர்களின் முதலாண்டு மறைவு தினத்தை நினைவு கூர்கின்றோம்**

ஏகாதிபத்தியத்தின் முதுகெலும்பை உடைப்பதற்கு அனைத்து நாடுகளுடனும், அனைத்து முற்போக்கு சக்திகளுடனும், அனைத்து முற்போக்கு விடுதலை இயக்கங்களுடனும், நாங்கள் ஒன்று சேர்ந்து, அதே நேரத்தில் தமிழீழ விடுதலைக்காகப் போராடுகின்ற அனைத்து மக்களுடனும் ஒன்று சேர்ந்து அதிலே வெற்றி பெற வேண்டும். அது தான் நாங்கள் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும்.

கழக செயலதிபர் ஆற்றிய அஞ்சலிக்கூட்ட உரையிலிருந்து.......


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்ற பெயரில் தங்களைக் குறிப்பிட்டு பல நாட்களாக தொடர்ச்சியாக பல கொள்ளைகள் நடத்தியதாகக் கூறப்படும் ஒரு குழுவினரை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இனம் கண்டதுடன் கொள்ளைப் பொருட்களையும் மீட்டுள்ளது. சில பொருட்கள் வள்ளமொன்றில் ஏற்பட்டபோது மீட்கப்பட்டுள்ளது. இயக்கங்களின் பெயர்களைப் பயன்படுத்திக்கொள்ளைகளை நடத்துபவர்கள் பற்றிய விபரங்களைத் தந்துதவுமாறும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பொதுமக்களைக் கேட்டுள்ளது. மீட்கப்பட்ட பொருட்களின் சொந்தக்காரர்களைத் தகுந்த அத்தாட்சிகளுடன் உரிய பொறுப்பாளர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் அறிவித்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பொ.செல்வராசா குடும்பத்தினர் தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தின் பெயரால் களவாடப்பட்ட ரீ.வி. டெக்ஐ தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரிடம் பெற்றுக் கொண்டு தங்களது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

இவ்வெல்லையிலே தமிழீழச் சமூகத்தின் சகல பரிமாணங்களையும் நன்கறிந்து பல்வேறு சமூகச் செயல்பாடுகளின் உச்சப் பயன்பாட்டைத் தரும் கட்டமைப்பின் மூலம் செயல்படுவோம்.




T-E-I-B

24 மணிநேரசேவை
24 HOURS SERVICE

FOR RECORDED MESSAGES, PLEASE RING
THAMIL - 01 470 6270 === ENGLISH - 01 552 5970.

Published by: Thamileelam Information Bureau, BM Box 1916, London WC1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்